இருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் பள்ளிக் கூடங்களாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளில் வருகிற வேகன்ஸிகளில் இந்தப் பட்டதாரிகளுக்கு இடம் அளிக்கப் படுவதில்லை. எனவே இம்மாதிரி பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் காலி இடங்கள் வந்தால் அதில் அவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: செகண்டரி கிரேடில் இருப்பவர்கள் பி.ஏ., பி.ஈ.டி. பட்டம் பெற்று தகுதி இருந்தால் அந்தப் பள்ளிக்கூடத்தில் அதே பாடத்திற்குரிய வேலை காலி ஏற்படும்போது அதில்தான் நியமிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளிகள், ஒன்றியப் பள்ளிகளை வலியுறுத்தி வருகிறோம். தனியார் பள்ளிகளும் வலியுறுத்தப்பட்டு வருகிறார்கள். சிலபல இடங்களில் போடவில்லை என்ற குறைபாடும் வருகிறது. எந்த வகையில் வற்புறுத்தலாம் என்பதுபற்றி கல்வித் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கொடுத்திருக்கிற சுற்றறிக்கையில் காலி ஏற்படும்போது அந்தப் பள்ளியில் பணியாற்றுகிறவர்கள் தகுதி பெற்றிருந்தால் அவர்களுக்கு முன் உரிமை தரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதைக் கட்டாயப்படுத்த வழி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா: பத்தாண்டுகளாக தொடர்ந்து பணி புரிகிற எல்லா ஹையர் கிரேடு ஆசிரியர்களையும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ஆக்குவதற்கு அரசு வழிவகை காண முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஆக்க இயலாது. அவர்கள் பெரும்பாலும் எட்டாவது வகுப்பு வரை படித்தவர்களாக இருக்கிறார்கள். இப்போது கணிதம், அறிவியல் இவற்றில் செகண்டரி கிரேடு படித்தவர்களுக்கே மறுபயிற்சி அளித்துச் செல்லவேண்டியிருக்கிறது. கல்வித் தகுதி குறைவாக வைத்து செகண்டரி கிரேடு பதவி தர முடியாது. தகுதியைப் பெருக்கிக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு வசதி இருக்கிறது.

1975 ஏப்ரல் 3]

தனியார் கல்லூரிகளுக்கு மானியம்.

*543 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தனியார் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகைகள் 1973-74-ம் ஆண்டிற்கு பெரிய அளவில் குறைக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்படி எந்தெந்த கல்லூரிகளுக்கு, எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : 1973-74-ல் இல்லை என்றாலும் 1974-75-ல் எல்லா தனியார் கல்லூரிகளிலும் ஆடிட் முறை ஏற்படுத்தி கணிசமான தொகை இரண்டு, இரண்டரை லட்சம் ரூபாய் என்று மானியம் கொடுப்பதில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்க அந்த மானியத்தை சரியான முறையில் கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே ஒரு கணக்கு நோஷனல் என்ற முறையில் குறிப்பிட்ட கணக்கு வைத்திருந்தார்கள். அதற்கும் செலவிற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தது. அண்மையில் ஒரு ஏற்பாட்டின்படி எவ்வளவு வரவு என்பதையும் காட்டவேண்டும், எவ்வளவு செலவு என்பதையும் காட்ட வேண்டும். டெபிஸிட்டில் 80 சதவிகிதம் அரசு ஏற்றுக் கொள்ளும், 20 சதவிகிதம் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்தது. அதனால் சிலபல கல்லூரிகளில் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதற்காக விதிமுறைகள் சில வகுத்து செலவழிப்பதில் சிலவற்றிற்கு முழுவதும் ஏற்றுக்கொள்கிற அளவில் முன்மானியமாக 26—3—1974-ல் ரூ. 30 லட்சம் ஒதுக்கி பல்வேறு கல்லூரிகளுக்கு தந்தோம். அதற்குப் பிறகும் சிலபல வகைகளில் தாங்கமுடியாத அளவிற்கு சில செலவுகள் இருக்கின்றன என்று கேட்டதற்குப் பிறகு மறுபடியும் ஆராயப்பட்டது. ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைக்காமல் பாதுகாத்தும் அவர்களுக்கு தற்போது நிர்வாகத்தினால் வழங்கப்படும் ஊதியம் குறையாத நிலையில் பாதுகாத்தும் 1—4—1973-க்குப் பிறகு அளிக்கப்பட்ட அகவிலைப்படிக்கான மானியத்தை நூறு சதவிகிதம்

மானியமாக அளித்தும், தளர்த்திய முறையில் 1973-74 ஆண்டிற்கான மானியம் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு மேற்கொண்டு கூடுதல் ரூ. 46,32,000 ஆகிறது. இந்த வகையில் ஓரளவு தனியாரின் சுமையைக் குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அந்த மானியம் கொடுக்கின்ற நேரத்தில்—அன்-குவாலிபைடாக இருந்தாலும், பி.எஸ்ஸி., அல்லது பி.காம். பஸ்ட் கிளாசில் தேறியிருந்தால், அவர்களை துணைப் பேராசிரியர்களாக சில கல்லூரிகளில் வைத்து இருக்கிறார்கள்—அந்தமாதிரி வைத்திருக்கிற கல்லூரிகளுக்கு கிராண்ட் கிடையாது என்று இப்போது அரசாங்கம் உத்தரவு போட்டு இருக்கிறது. ஆனால் 10 ஆண்டு காலத்திற்கு முன்னாலே பல்கலைக்கழகத்தின் எக்சம்ஷன் பெற்று அவர்களை அப்பாயின்ட் செய்து இருக்கிற காரணத்தால், தனியார் கல்லூரிகளில் அப்படிப் பட்டவர்களை பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் என்று வைத்து இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரத்தில் பிரின்சிபாலாக இருப்பவரே பி.எஸ்ஸி. தான். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, அரசாங்கம் அதில் கண்டிப்பாக இல்லாமல், இப்படி எக்சம்ஷன் வாங்கியிருந்தாலும் கிடையாது என்று இல்லாமல், அப்படிப்பட்ட தனியார் கல்லூரி களுக்கும் கிராண்ட் கொடுப்பதற்கு அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதையும் திட்ட வட்டமாகச் செய்யமுடியாது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு எக்சம்ஷன் பெற்று அப்படி இருக்கிறார்கள் என்று சொன்னால், அது குறித்து தனியாகத்தான் ஆராயவேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால், நியாயத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கலாம். பொதுப்படையாக சட்டத்தைப் போட்டு விட்டு, மறுபடியும் அதில் இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்ற காரணத் திற்காக அதை மாற்றிக்கொள்ள முடியாது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இன்றையதினம் தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக இருப்பவர் களுக்கு தகுதியின் அடிப்படையில் ஊதியம் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கல்லூரிகளை நல்வகையில் நிர்வகிக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. மானியம் போதவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுக்க முடியவில்லை என்று சொல் கிறார்கள். நாம் அளிப்பதுபோல் அளிப்பது என்றால் மாதம்